
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 72 - தமிழ்

## புள்ளியிடும் திட்டம்



இந்த புள்ளியிடும் திட்டம் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது.
பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..........................................................................  ✓  $\frac{4}{5}$

..........................................................................

..........................................................................

(ii) ..........................................................................  ✓  $\frac{3}{5}$

..........................................................................

..........................................................................

(iii) ..........................................................................  ✓  $\frac{3}{5}$

..........................................................................

..........................................................................

(03)   (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018
# 72 - தமிழ்
# புள்ளி வழங்கும் திட்டம்

## பத்திரம் I

**பகுதி I**

கட்டாய வினாக்கள்

| | |
|---|---|
| வினா 01 | 24 புள்ளிகள் |
| வினா 02 | 16 புள்ளிகள் |

**பகுதி II**

எவையேனும் 3 வினாக்கள்

| | | |
|---|---|---|
| | 20 x 3 | 60 புள்ளிகள் |
| | | 100 புள்ளிகள் |

## பத்திரம் II

**பகுதி I**

கட்டாய வினாக்கள்

| | |
|---|---|
| வினா 01 | 30 புள்ளிகள் |
| வினா 02 | 20 புள்ளிகள் |
| வினா 03 | 20 புள்ளிகள் |

**பகுதி II**

| | | |
|---|---|---|
| பிரிவு அ (ஏதேனும் 1 வினா) | 15 x 1 | 15 புள்ளிகள் |
| பிரிவு ஆ (ஏதேனும் 1 வினா) | 15 x 1 | 15 புள்ளிகள் |
| | மொத்தம் | 100 புள்ளிகள் |

**இறுதிப் புள்ளி கணித்தல்**

| | | | |
|---|---|---|---|
| பத்திரம் I | 100 புள்ளிகள் | | |
| பத்திரம் II | 100 புள்ளிகள் | | |
| மொத்தம் | 200 புள்ளிகள் | | |
| இறுதிப் புள்ளி | 200 ÷ 2 | = | 100 புள்ளிகள் |

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018
## தமிழ் I
## புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள், முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள ஆறு வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

### பகுதி I

01. (i) அ. 04 புள்ளிகள் ஆ. 04 புள்ளிகள் இ. 04 புள்ளிகள்
(ii) அ. 04 புள்ளிகள் ஆ. 04 புள்ளிகள் இ. 04 புள்ளிகள்
(12 + 12 = 24 புள்ளிகள்)

02. (அ) அல்லது (ஆ)
(i) 04 புள்ளிகள் (ii) 04 புள்ளிகள் (iii) 04 புள்ளிகள்
(iv) 04 புள்ளிகள்
(04 × 04= 16 புள்ளிகள்)

### பகுதி II

03. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
(5 × 4 = 20 புள்ளிகள்)

04. எவையேனும் நான்கு பகுதிகளுக்கு பரீட்சார்த்திகள் விடையளித்தல் வேண்டும்.
அ 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
(5 × 4 = 20 புள்ளிகள்)

05. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
(5 × 4 = 20 புள்ளிகள்)

06. அ. 04 புள்ளிகள் ஆ. 06 புள்ளிகள் இ. 04 புள்ளிகள்
ஈ. 06 புள்ளிகள்
(4 + 6 + 4 + 6 = 20 புள்ளிகள்)

07. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
(5 × 4 = 20 புள்ளிகள்)

08. அ. ஆ. இ. ஈ. } பரீட்சார்த்திகள் தெரிவு செய்யும் இரு தலைப்புகளுக்கு தலா 10 புள்ளிகள் வீதம் வழங்குக.
(10 × 2 = 20 புள்ளிகள்)

# க.பொ.த உயர்தரம் -2018

## தமிழ் - 1

## பகுதி - 1

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

දෙමළ I
தமிழ் I
Tamil I

72 T I

11.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்.

(அ) இச்செய்யுட் பகுதியில் பாரியின் நாட்டுவளம் காட்டப்படுமாற்றை விளக்குக.

(ஆ) இதில் பாரியின் வீரம் விளங்குமாற்றைத் தெளிவுபடுத்துக.

(இ) இதில் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அ)

- உழவர்களால் உழுது விளைவிக்கப்படாத நான்கு விளைபயன்களை உடையது.
  - சிறிய இலைகளையுடைய மூங்கிலில் நெல் விளைதல்.
  - இனிமையான சுளைகளையுடைய பலாக்கனி பழுத்து உதிர்தல்.
  - செழிப்பான கொடிகளில் வள்ளிக்கிழங்கு விளைதல்.
  - தேன் அருவியாகச் சொரிதல்.
- வானத்தைப் போன்று பரந்து விரிந்த மலைப்பிரதேசம்.
- விண்மீன்களைப் போன்று நிறைந்துள்ள நீர்ச்சுனைகள்.

**(04 புள்ளிகள்)**

(ஆ)

- பெருமை வாய்ந்த முரசுடைய மூவேந்தர்கள் முற்றுகையிட்டாலும் வெல்லப்பட முடியாதவன்.
- மரங்கள்தோறும் யானைகளைக் கட்டி நிறுத்தி வைத்தாலும், இடம் முழுவதும் தேர்ப்படைகளைப் பரப்பி வைத்தாலும் வெல்ல முடியாதவன்.
- வாள் வலிமை காட்டுதல் முதலான வேறு எம்முயற்சிகளை மேற்கொண்டாலும், வெல்ல முடியாதவன்.

**(04 புள்ளிகள்)**

(இ)

- **வான்கண்அற்று அவன் மலையே**

  உவமானம்: வானம்

  உவமேயம்: மலை

  பொதுத்தன்மை: உயரமும் அகலமும் உடையது.

- **மீன்கண்அற்று அதன் சுனையே**

  உவமானம்: விண்மீன்

  உவமேயம்: நீர்ச்சுனை

  பொதுத்தன்மை: பன்மை

**(04 புள்ளிகள்)**

(ii) விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் தன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயி கோயி னண்ணித்
தொண்டைவாய் மடந்தை மாரிற் சொல்லமற் றவருஞ் சொல்லப்
பெண்டிரிற் கூற்ற மன்னாள் பிள்ளையைக் கொணர்க வென்றாள்.

(அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ஆ) இச்செய்யுளில் இடம்பெறும் உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(இ) தசரதன் பெருமையும் கைகேயி சிறுமையும் இச்செய்யுளில் உணர்த்தப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக. (24 புள்ளிகள்)

(அ) தசரதன், கைகேயின் அந்தப்புரத்தில் இருப்பதை உணர்ந்த சுமந்திரன், அங்கு சென்றபோது , இராமனை அழைத்து வருமாறு அவனிடம் கைகேயி கூறுதல்.

**(04 புள்ளிகள்)**

(ஆ)

- **தொண்டைவாய்**

  உவமானம் : கொவ்வைக்கனி

  உவமேயம் : வாய்

  பொதுத்தன்மை : சிவந்த நிறம்

- **கூற்றம் அன்னாள்**

  உவமானம்: கூற்றம் (யமன்)

  உவமேயம்: கைகேயி

  பொதுத்தன்மை: கொடுமை

**(04 புள்ளிகள்)**

(இ) **தசரதன் பெருமை**

- விண்ணை முட்டுமாறு உயர்ந்த அரண்மனை உடையவன்.
- அரசர்க்கு அரசன்.

**கைகேயியின் சிறுமை**

- யமனை ஒத்த கொடியவள்.

**(04 புள்ளிகள்)**

**[12 + 12 = 24 புள்ளிகள்]**

**2.** 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) அருளின் முதலோன், அன்புடையோன்!
அகிலம் புரக்கும் எங்கோமான்
திருவார் மாந்தர் திருநாவில்
தேனாம் இனிய மொழிவைத்தோன்!
உரவோன், அன்னான் திருநாமம்
உன்னி, இதனை ஓதுகிறேன்!

செய்ய கருணைச் செழுஞ் சோதி;
சிந்தை நீறி உழல்வாரும்
உய்ய அருளும்! உள்நொந்தார்
உருக அருளும்! ஒருகுரலில்
வையம் கொள்ள பேரரசும்
வழுத்தி இரக்கும் ஒரு சீமான்!
ஐய! கருணை யங்கடலில்
ஆடா தானின் பாடென்னே ?

தன்னில் தானாம் நிலையுடையான்!
தனியோர் ஆட்சி வலியுடையான்!
தன்னை உணர்வார் அருகமைவான்!
தனக்கே உரியார் துயர் களைவான்!
அன்னோன் ஆற்றல் ஆழத்தை
அளந்தார் யாரே ? அளப்பாரே ?
ஒன்று மற்ற தொன்றாலே
உலகைச் செய்தான் என் இறையே!

திரையின் பின்னால் நோக்குகிறேன்!
தீங்கின் பாலே திளைப்பார்க்குத்
துரும்பைக் கொண்டே பெரும் துன்பம்
தொடரச் செய்யும் மாவல்லோன்!
இருமை உலகும் அவனறிவில்
இரண்டு துளிகள் எனலாமே!
அருமை இறைவன் புகழுங்கி
அறிவாம் கைக்கு வசமாமோ ?

(i) இக்கவிதையில் கவிஞர் இறைவனின் புகழை எவ்வாறு எடுத்துரைக்கிறார் என்பதை விளக்குக.

(ii) பின்வரும் கவிதை வரிகளின் பொருளையும் கவிநயத்தையும் தெளிவுபடுத்துக.

(அ) ஐய! கருணை யங்கடலில்
ஆடா தானின் பாடென்னே ?

(ஆ) அருமை இறைவன் புகழுங்கி
அறிவாம் கைக்கு வசமாமோ ?

(iii) பின்வரும் வரிகளின்மூலம் இறைவனின் எல்லையற்ற ஆற்றலையும் அறிவையும் கவிஞர் புலப்படுத்துமாற்றை விளக்குக.

(அ) ஒன்று மற்ற தொன்றாலே
உலகைச் செய்தான் என் இறையே!

(ஆ) இருமை உலகும் அவனறிவில்
இரண்டு துளிகள் எனலாமே!

(iv) தமிழ்ப் பக்தி இலக்கிய மரபில் இக்கவிதை பெறும் இடம் பற்றி மதிப்பிடுக.

(அ) (i) அருளின் முதல்வன், அன்புடையவன், அகிலத்தைப் பாதுகாப்பவன்,மனிதர்களுக்கு மொழியை அருளியவன், கருணையின் ஒளி, எல்லோருக்கும் அருள் பாலிப்பவன், கருணைக்கடல், தானாகவே நிலைபெற்றவன்,ஆட்சி வலிமை பெற்றவன், அவனை உணர்ந்தவர்களின் அருகில் இருப்பவன்,அவனை நம்பியவர்களின் துயரைக் களைபவன், தீங்கு செய்பவர்களுக்குத் துரும்பைக் கொண்டே துன்பம் தரக் கூடியவன், அவனுடைய ஆற்றலை யாராலும் அளவிட முடியாது என்றெல்லாம் இறைவனின் அன்பு, கருணை, ஆற்றல் என்பவற்றைக் கவிஞர் புகழ்ந்து கூறுகின்றார்.

(04 புள்ளிகள்)

(ii)

(அ) பொருள்:இறைவனின் கருணையாகிய அழகிய கடலில் நீராடித் திளைக்காதவனின் கதி என்னே!

கவிநயம்: இறைவனின் கருணையை அழகிய கடலாக உருவகித்து அதில் நீராடித் திளைக்காதவனின் கதி என்னே என்று வியப்பதன் மூலம் இறைவனின் பெருமையையும், அதை உணராதவர்களின் கதியையும் புலப்படுத்துவது கவிஞரின் கவியாற்றலைக் காட்டுகிறது.

(ஆ) பொருள்: இறைவனுடைய புகழ் என்னும் அங்கி அறிவு என்னும் கைக்கு வசமாகுமா (இறைவனின் புகழை அறிவினால் விளக்க முடியாது)

கவிநயம்: இறைவனின் புகழை அங்கி (ஆடை)யாகவும், அறிவை கையாகவும் உருவகித்து இறைவனின் புகழ் அறிவுக்கு அகப்படுமா என்று கேட்பதன் மூலம் இறைவனின் புகழ் அறிவால் விளக்க முடியாதது என்பதை வலியுறுத்துவது.

(04 புள்ளிகள்)

(iii) (அ) ஒன்றுமற்ற வெற்றுவெளியிலிருந்து (இல்லாத ஒன்றிலிருந்து) இறைவன் இந்த உலகத்தைச் சிருஷ்டித்தான் என்பதன் மூலம் இறைவனின் எல்லையற்ற ஆற்றலை கவிஞர் வெளிப்படுத்துகின்றார்.

(ஆ) இம்மை உலகும், மறுமை உலகும் இறைவனுடைய அறிவின் இரண்டு துளிகள் என்பதன் மூலம் இறைவனின் எல்லையற்ற அறிவை கவிஞர் புலப்படுத்துகின்றார்.

**(04 புள்ளிகள்)**

(iv) தமிழ்ப்பக்தி இலக்கியங்கள் (மதம் கடந்த நிலையில்) இறைவனின் அன்பு, கருணை, ஆற்றல் என்பவற்றைப் புகழ்ந்து பாடுகின்றன. அத்தகைய இறைவனின் அடி சேருவதையே வாழ்வின் குறிக்கோளாக வலியுறுத்துகின்றன. அத்தகைய பக்தி இலக்கிய மரபில் இக்கவிதையும் முக்கிய இடம்பெறுகின்றது.

**(04 புள்ளிகள்)**

## அல்லது

(ஆ) அன்று மரங்களே சீவவில்லை. ஒரு சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். புறப்படும்போது எதிரில் கண்ட பையனிடம் தான் பின்னேரம் வராவிட்டால் மரங்களைச் சீவிவிடும்படி சின்னத்தம்பிக்குச் செய்தி அனுப்பினான். எங்கே செல்கிறோம் என்ற எண்ணமேயில்லாது சைக்கிளை உழக்கினான். வேகமாக உழக்கினான். அவனையறியாமலே சிந்தனை உறுத்த, வேகம் இடையிடை தடைப்பட்டது. எதிரே வரும் வாகனங்களையே கவனித்து ஒதுக்கி ஓட முடியவில்லை. நெஞ்சம் இடையிடை விம்மிப் பொருமி உடைந்தது. கண்கள் கலங்கி எதிரே யாவும் மங்கலாகத் தெரிந்தன.

பலாலியை நோக்கி ஓடிக் கொண்டிருப்பது நினைவில் வந்தது. பனைக்கூடல் ஒன்றைத் தாண்டியபோது பிளா ஒன்று தொங்கியதைக் கண்டான். கள்ளுக் கொட்டில் எங்கே என்று சுற்றுமுற்றும் பார்த்தான். பனைக்கூடலின் உள்ளே ஒரு குடிசையின் முன்னிலையில் முட்டிகள் இருப்பது தெரிந்தது. இறங்கிச் சைக்கிளை உருட்டியபடியே நடந்தான்.

களளிறக்கியபோதும் அவன் குடிப்பது மிக அரிது. மயக்கம் வருமவரை குடித்து மனத்துன்பத்தை மறக்க வேண்டும்போல் தோன்றியது.

மன அருவருப்போடு கண்ணை மூடிக் கொண்டே கள்ளைக் குடித்தான். இன்பத்திற்கு மதுவருந்துவதுபோல அவன் எண்ணிக்கொள்ளவில்லை. நோய் தீர மூக்கைப் பிடித்துக் கொண்டு மருந்தை விழுங்கும் குழந்தை நிலையிலேயே இருந்தான்.

சிறிது நேரம் வானத்தில் பறப்பதுபோன்ற ஓர் உணர்ச்சி. மீண்டும் சைக்கிளில் ஏறி உழக்கிக் கொண்டேயிருந்தான்.

கீரிமலை வந்துவிட்டது. சைக்கிளை ஓரிடத்தில் வைத்து உடுப்புக்களையும் அதில் கட்டிவிட்டு கடலிலே இறங்கி நீந்தினான். தலையை தண்ணீரிலே தோய்த்துத் தோய்த்து எடுத்தான். மனநிலை மாறவில்லை. கள் வெறி முற்றாக முறிந்ததும் மீண்டும் மனநிலை மோசமடைந்து வந்தது. காலை தொடக்கம் நண்பகலாகியும் பசியே எடுக்கவில்லை. இதுவரையில் பிரேதச் சடங்குகள முடிந்திருக்குமோ ?

உலகத் துன்பமெல்லாம் தன் தலையில் சேர்ந்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. வேட்டியைக் கட்டி சேட்டைப் போட்டுக்கொண்டு மீண்டும் சைக்கிளில் ஏறினான்.

கடற்கரையோரமாகத் தென்னந் தோட்டத்திலிருந்த கள்ளுக் கொட்டில் ஒன்றில் நுழைந்தான். மீண்டும் விழுங்க முடிந்தளவை வயிற்றுள் செலுத்தினான். மன அமைதி ஏற்பட்டதுபோன்ற ஓர உணர்வு. மீண்டும் சைக்கிளில் ஏறினான் உடல் சோர்ந்தபோதும் சிந்தனை சோரவில்லை. மயக்கநிலை சிறிது தெளியத் தொடங்கியதும் மீண்டும் சரஸ்வதியின் நினைவே தலையெடுத்தது. இதுவரையில் சுடலைக்கு எடுத்துச் சென்றிருப்பார்கள். கொள்ளிக் கட்டையில் சவப்பெட்டியை வைத்திருப்பர்.

யாழ்ப்பாணப் பட்டணத்திற்கு வந்து சேர்ந்து விட்டான். சாராயத் தவறணைக்குச் சென்று குடிக்க முடிந்தவரை குடித்தான். சைக்கிளை உருட்டிக்கொண்டே முனியப்பர் கோவில் வரை நடந்தான். சைக்கிளை வைத்துவிட்டு பூவரசமர நிழலில் சோர்ந்துபோய் உட்கார்ந்தான்.

இதுவரையில கொள்ளி வைத்திருப்பார்கள்.

எல்லோரும் சுடலையை விட்டுக் கிளம்பியிருப்பர். தீ மூண்டு எரிந்து கொண்டிருக்கும். அதன் சுவாலை நாக்குகள் சரஸ்வதியையும் சிசுவையும் பசியாறிக் கொண்டிருக்கும்!

மீண்டும் நினைவு வந்தபோது பொழுது சாய்ந்துவிட்டது. எதிரே தெரிந்த சினிமாத் தியேட்டரின்முன் ஒரே கூட்டம். அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டான். தனியே ஓடிவந்த ஆறு கடலுடன் கலப்பதுபோல் மனித கூட்டத்துடன் சேர்வதிலும் ஒரு சாந்தி இருப்பதாக உணர்ந்தான்.

தியேட்டருக்குள் ஒரே கூட்டம். வியர்வை, கலகலப்பு, கைதட்டல்கள். திரையில் காட்சிகள் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. கடலலையிடையே அகப்பட்டு மறைந்து மறைந்து தோன்றும் தெப்பக் கட்டைபோல சரஸ்வதியின் நினைவும் இடையிடை மேலெழுந்துகொண்டிருந்தது.

(i) சரஸ்வதியின் தற்கொலை செல்லத்துரையன்மீது ஏற்படுத்திய தாக்கம் பற்றிய இச்சித்திரிப்பின் மூலம் ஆசிரியர் எதை உணர்த்துகிறார் என்பதை விளக்குக.

(ii) செல்லத்துரையனின் மனப்போராட்டத்தை வெளிப்படுத்துவதற்கு ஆசிரியர் கையாளும் விபரண உத்தியின் சிறப்பை விளக்குக.

(iii) செல்லத்துரையனின் மனதில் சரஸ்வதியின் இறுதிக்கிரியை பற்றி அடிக்கடி தோன்றும் எண்ணம், அவனுடைய மனநிலையை எவ்வாறு வெளிப்படுத்துகின்றது என்பதைத் தெளிவுபடுத்துக.

(iv) ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரைக்குக. (16 புள்ளிகள்)

(i) செல்லத்துரையனுக்கும் சரஸ்வதிக்குமிடையே இரகசியமான காதல் உறவு இருந்தது என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார். சரஸ்வதியின் தற்கொலைக்கு அந்த உறவும் அதன் மூலம் அவள் கருவுற்றதும் காரணம் என்பதும் உணர்த்தப்படுகிறது. சாதி மாறிய காதலை ஏற்றுக்கொள்ளாத சாதியமைப்பின் இறுக்கமும், அதன் குரூரமும் உணர்த்தப்படுகிறன.

(04 புள்ளிகள்)

(ii) செல்லத்துரையனின் ஒவ்வொரு செயற்பாட்டையும் விபரிப்பதன் மூலம் அவனது குற்றவுணர்வையும், மனப்போராட்டத்தையும் ஆசிரியர் சிறப்பாகச் சித்திரிக்கின்றார்.

- குறிக்கோள் இல்லாமல் மனம்போனபடி சைக்கிளில் ஓடுவது.
- எல்லைமீறி கள் குடிப்பது.
- கீரிமலையில் தலைமுழுகுவது போன்ற செயல்கள்.

(04 புள்ளிகள்)

(iii) சரஸ்வதியின் இறுதிக் கிரியை பற்றி செல்லத்துரையன் அடிக்கடி நினைக்கிறான். அவன் அங்கு இல்லாவிட்டாலும் இப்போது என்ன நடந்திருக்கும் என்ற எண்ணம் அவன் நினைவில் தோன்றுகின்றது. சரஸ்வதியும், அவள் வயிற்றுச் சிசுவும் அவன் எண்ணத்தை ஆக்கிரமித்திருப்பதை இது வெளிப்படுத்துகின்றது.

(04 புள்ளிகள்)

(iv) ஆசிரியர் ஒரு விபரண நடையைக் கையாண்டுள்ளார். சிறுசிறு சம்பவங்களாக விபரிக்கின்றார். அதற்கேற்ப சிறுசிறு வாக்கியங்களைப் பயன்படுத்துகின்றார். வாசிப்பவரின் மனதில் மனக்காட்சிகளை உருவாக்கும் விபரணநடை சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(04 புள்ளிகள்)

[04 × 04 = 16 புள்ளிகள்]

## பகுதிII

**3.** **வினைசெயல்வகை** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு,

(அ) வினைசெய்யும் திறம், வலியினது சிறப்பு, வலிமைகொண்டு செய்யும் திறம் ஆகியனவும்

(ஆ) ஒப்பான் செய்யும் திறமும்

(இ) மெலியான் செய்யும் திறமும்

விளக்கப்பட்டிருக்குமாற்றினை எடுத்துக்காட்டுவதுடன்,

(ஈ) அவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள உவமைகளை இனங்கண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

(அ) **வினை செய்யும் திறம்.**

- ஆராய்ந்து துணிந்த செயலை விரைந்து செய்யாது காலதாமதம் செய்வது தீமை தரும்.
- காலம் தாழ்த்திச் செய்யத்தக்கவற்றை காலம் தாழ்த்தியே செய்தல் வேண்டும்; காலம் தாழ்த்தாது செய்ய வேண்டியவற்றில் கால தாமதம் கூடாது.

**வலியினது சிறப்பு**

- இயலும் இடமெல்லாம் வினை செய்தல் நன்று; இயலாத காலத்து, இயலும் இடம் பார்த்து அதனைச் செய்தல் வேண்டும்.

**வலிமைகொண்டு செய்யும் திறம்**

- செய்யத் தொடங்கிய செயல், கொள்பகை ஆகிய இரண்டின் குறை, ஆராய்ந்து பார்த்தால் தீயின் குறைபோல வளர்ந்து கெடுக்கும்.

**(05 புள்ளிகள்)**

(ஆ) **ஒப்பான் செய்யும் திறம்**

- (வேண்டிய) பொருள் (ஏற்ற) கருவி, (தக்க) காலம், (மேற்கொண்ட) தொழில், (பொருத்தமான) இடம் ஆகிய ஐந்தையும் மயக்கம் அற எண்ணிய பின் தொழிலைத் தொடங்க வேண்டும்.
- தொடங்கும் தொழிலை முடிக்குமாறு, அதற்கு வரும் இடையூறு, முடிந்தால் உண்டாகும் பயன் என்பவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்.
- தொழிலைச் செய்யுமிடத்து அத்தொழிலின் உண்மை நிலையறிந்து, முன்பு நடத்தி வந்தவரின் கருத்தையொட்டியே அதனைச் செய்தல் வேண்டும்.

**(05 புள்ளிகள்)**

**(இ) மெலியான் செய்யும் திறம்**

- தொடங்கிய தொழிலால் அதுபோன்ற பிறிதொரு தொழிலையும் முடித்துக் கொள்ளல், மதம் கொண்ட யானையால் அது போன்ற பிறிதொரு யானையைக் கட்டுதல் போன்றது.
- தம் சுற்றத்துக்கு நல்லவை செய்தலினும் பகைவரைப் பொருந்தி நட்பாகக் கொள்ளுதலை விரைந்து செய்தல் வேண்டும்.
- வலிமை குறைந்தவர்கள், தம்மைச் சேர்ந்தவர்கள் அஞ்சித் தம்மைவிட்டு நீங்கின் அடியோடு கெடுவர். ஆதலால் (அவ்வாறு கேடு நேராதபடி) வலியாரைப் பணிந்து சமாதானம் செய்தல் வேண்டும்.

**(05 புள்ளிகள்)**

**(ஈ) உவமைகள்**

- தொடங்கிய செயல், கொண்ட பகை ஆகியவற்றை முழுவதுமாக முடிக்காது அரை குறையாக விடல், தீயை முற்றாக அவிக்காது விடுதல் போன்றது; ஆபத்தானது.
- தொடங்கிய தொழிலால் இன்னொரு தொழிலையும் முடித்துக் கொள்ளல், மதம் கொண்ட யானையால் மற்றொரு யானையைக் கட்டுதல் போன்றது.

(இன்னொரு காரியத்தை முடிக்கவல்ல உபாயத்தை எண்ணிச் செய்க.)

**(05 புள்ளிகள்)**

**4.** சிலப்பதிகாரம் துன்பமாலையில்

(அ) கோவலன் கொலையுண்ட செய்தியைக் கண்ணகி அறிந்துகொண்ட சந்தர்ப்பத்தினை விவரிக்குக.

(ஆ) கோவலன் கொலையுண்டமை கேட்ட கண்ணகியின் பதகளிப்பு சித்திரிக்கப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(இ) கணவரை இழந்த கைம்பெண்கள் அன்று கடைப்பிடித்த நோன்புகள்மூலம் தன்னை மாய்த்துக்கொள்ளக் கண்ணகி உடன்படாதது ஏன் ?

(ஈ) குற்றமற்ற கோவலன்மீது சுமத்தப்பட்டது வீண்பழி என்பது எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது ?

(20 புள்ளிகள்)

**[05 × 04 = 20 புள்ளிகள்]**

(அ) குரவைக் கூத்து முடிந்தபின், வையை ஆற்றில் நீராட மாதரி சென்றவேளை, ஊர் அரவம் கேட்டுவந்த பெண்ணொருத்தி பேசாது நின்றநிலை கண்டு பலரும் அவளைச் சூழ்ந்து, நடந்ததை அறிய முயல்கையில், மதுரை நகருட் சென்ற தன் கணவன் இன்னமும்

திரும்பாததால் வருந்திநின்ற கண்ணகி, கேள்விப்பட்ட செய்தியைக் கூறுமாறு வினவ, அவள்,"அரண்மனையிற் சிலம்பினைத் திருடிய கள்வன் என்று ஊர்காவலர் உன் கணவனைக் கொலை செய்தார்கள்" என்றாள்.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- ஆவேசம்கொண்டு வேகமாக எழுந்தாள்; நிலவெறிக்கும் சந்திரன் தன்னைச் சூழவுள்ள கருமேகத்தோடு நிலத்திலே வீழ்வது போல் மயங்கி வீழ்ந்தாள்.
- கண் சிவக்கும்படி அழுதாள்.
- பின் தன் கணவனை நினைந்து "நீ எவ்விடத்தாய்?/எங்குள்ளாய்?" என்று பொருமி மயங்கினாள்.

**(05 புள்ளிகள்)**

(இ) மக்கள் பழி சொல்ல, மன்னன் செங்கோல் பிழைத்து தவறு செய்ய, இப்பிறவியில் கெட்ட பெயர் உண்டாக அவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு வெறுமனே இருந்து மடிதல் அவளுக்குச் சம்மதம் இல்லாததால்

**(05 புள்ளிகள்)**

(ஈ)

- "கள்வனோ என் கணவன்?" என்று சூரியனைப் பார்த்துக் கேட்கிறாள்.
- "கள்வன் அல்லன்: எரியுண்ணும் இவ்வூர்" என்று அசரீரி ஒலிக்கிறது.

**(05 புள்ளிகள்)**

**[05 × 04 = 20 புள்ளிகள்]**

5. **கைகேயி சூழ்வினைப் படலத்தில்** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கு** விடயங்கள், கம்பராலே சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றினைத் தெளிவுபடுத்துக.

(அ) இராமனது முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்த தசரதன் அதனைத் தெரிவிக்கும் ஆர்வத்துடன் கைகேயியிடம் வந்தபோது அவள் கிடந்த கோலம்

(ஆ) கைகேயி கேட்ட இரு வரங்களைச் செவியுற்ற தசரதன் நிலை

(இ) வரங்களை அளித்த தசரதன் செயல் மறந்து மயங்கிய இரவு கழிந்தவாறு

(ஈ) இராமன் முடிசூடப்போகிறான் என்று கேள்விப்பட்ட நகரமக்கள் மனநிலை

(உ) மன்னவன் ஆணையைக் கைகேயி கூறக் கேட்ட இராமன் நிலை (20 புள்ளிகள்)

(அ)

- மலர்ப்படுக்கையினின்றும் இறங்கி, கூந்தலில் சூடியிருந்த மாலையை மேகத்திலிருந்த சந்திரனை இழுத்துச் சிதைப்பதுபோல் கூந்தலினின்றும் பிடுங்கிச் சிந்தினாள்.
- தன் புகழாகிய வல்லிக்கொடியை வேருடன் அறுப்பதுபோல மேகலாபரணத்தை அறுத்துச் சிதற எறிந்தாள்.
- வளையல்களைக் கழற்றி வீசினாள்.
- நெற்றித்திலகத்தையும் துடைத்துவிட்டாள்.
- ஏனைய ஆபரணங்களையும் சிதறவிட்டாள்.
- கூந்தலைத் தரையிலே பரப்பி, கண்ணீர் விட்டபடி மலர்களை உதிர்த்துவிட்ட கொம்புபோல நிலத்திலே வீழ்ந்தாள்.
- மான் விழுந்ததுபோல, ஆடிய மயில் ஆடல் ஒழிந்து படுத்தது போல, மூதேவி என்னும்படி சோர்ந்து கிடந்தாள்.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- நச்சுப்பாம்பின் விஷத்தினால் செயலிழந்த யானைபோல் வீழ்ந்தான்.
- புழுதியில் புரண்டான்.
- மனம் மிக வெதும்பிக் கொல்லன் உலைக்களத்து நெருப்புப்போலப் பெருமூச்சு விட்டான்.
- நா வரண்டு, உயிர் போகத்தொடங்கியது; மனம் வாடியது; கண்கள் மிகுந்த இரத்தத்தைச் சிந்தின.
- கவலை மிகுந்து செய்யத்தக்கது எது என ஐம்புலன்களும் கலங்கித் தவித்தன. (தன்னைச் சற்றுத் தேற்றிக்கொண்டு எழுந்திருப்பான்; நிற்பான்; வீழ்வான்;மூச்சடங்கி ஓவியம்போல் அசையாது கிடப்பான்.

- கைகேயியைப் பற்றிப் பிடித்து நிலத்திலே மோதலாமா என நினைப்பான்.
- வெந்த புண்ணில் வேல் நுழைவதனால் வருந்தும் யானைபோல் ஆன தசரதன், ஒரு பெண்ணைக் கொல்வதனால் ஏற்படும் பழிக்கு நாணுவான்; உள்ளத்து நிறைந்த துன்ப வெள்ளத்தோடு மேலும் பெருமூச்சுவிட்டு அலைவான்.

**(05 புள்ளிகள்)**

(இ)

- இரவென்னும் பெண், கைகேயியின் தீச் செயலுக்கு நாணி அகன்றாள்.
- வைகறை யாமத்து கூவும் கோழிகள் மனங்கலங்கி வயிற்றில் அடித்து அழுவதைப் போன்றன.
- பல்வகைப் பறவைகளின் ஒலிகள், மன வேதனையால் கைகேயியைத் திட்டுவதைப் போன்றன.
- நாமும் இந்த நாட்டினைவிட்டு அகல்வோம் என்பதுபோல் யானைகள் கிளம்பின.
- வானத்துப் பந்தலில் வேயப்பட்டிருந்த முத்து விதானத்தைப் பிரித்துவிட்டதுபோல் விண்மீன்கள் மறைந்தன.

**(05 புள்ளிகள்)**

(ஈ)

- துன்னு காதல் துரப்ப எழுந்து வந்தனர்.
- மங்கையர் பரபரப்போடு எழுந்து அலங்கரித்துக் கொண்டனர்.
- நகர மக்கள் மகிழ்ந்தனர்.
    - மங்கையர் கோசலை மனம் ஒத்தார்
    - வேதியர் வசிட்டரை ஒத்தார்.
    - மகளிர் சீதையை ஒத்தார்.
    - சாதுகை மாந்தர் (சற்குணர்) தசரதனை ஒத்தார்.
- மக்கள் வீதிகளில் வெள்ளம்போல் திரண்டனர்.

**(05 புள்ளிகள்)**

(உ)

- "என் தந்தையின் ஏவலை, தாயாகிய நுமது வாயால் கேட்பது பெரும்பேறாகும், அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்வேன்" என இராமன் கூறுதல்.
- தசரதனது கட்டளையைக் கூறியபோது அவனது முகம் செந்தாமரை மலரை வென்றதாக மலர்தல்.
- உடையவனால் வண்டியில் பூட்டப்பட்ட எருது, கருணையுடைய வேறொருவனால் அவிழ்த்துவிடப்பட, அப்பாரம் நீங்கி மகிழ்ந்தது போன்ற நிலையை இராமன் அடைதல்.

**(05 புள்ளிகள்)**

(ஏவையேனும் நான்கிற்கு) **[05 × 04 = 20 புள்ளிகள்]**

6. சுவாமி விபுலாநந்தரின் பாரதி பாடல் என்னும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) மனித வாழ்வில் கவிதையின் முக்கியத்துவம் பற்றிய விபுலாநந்தரின் கருத்து

(ஆ) தமிழ்நாட்டுக் கவிவாணருள் 'முதல்வைத்து எண்ணப்படும் தகைமை சான்றவர்' பாரதியாரே என்று விபுலாநந்தர் கருதுவதற்கான காரணம்

(இ) பாரதியார் பாடல்களை பொருள் அடிப்படையில் விபுலாநந்தர் வகைப்படுத்தும் முறை

(ஈ) பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' பற்றிய விபுலாநந்தரின் மதிப்பீடு , (20 புள்ளிகள்)

(அ)

- மனித வாழ்வின் எல்லாப் பருவத்திலும் மனதுக்கு ஊக்கத்தையும், உவகையையும் அளிப்பது.
- குழந்தைப் பருவத்தில் தாலாட்டிக் கண்வளர்விப்பது; வாலிபப் பருவத்தில் காதல் ஊட்டிக் களிப்புறச் செய்வது; ஒத்த வயதினரோடு விளையாடும்போது உள்ளத்தில் கிளர்ச்சியினையூட்டி மகிழ்விப்பது; கிழப்பருவத்தில், கழிந்துபோன இளமையை நினைவூட்டி மகிழ்வுறுத்துவது.
- உயிரற்றுக் கிடக்கும் வெற்றுடம்பிற்கும் உயிரளிப்பது.
- ஆருயிர்க்கு உறுதி பயக்கும் அமிர்தத்தை நிகர்த்தது.

**(04 புள்ளிகள்)**

(ஆ)

- தமிழ்நாடு செய்த தவப்பயனாய் உதித்து, தமிழ்நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் அளவிடற்கரிய பேருபகாரத்தைச் செய்தமை.
- யாவரும் எளிதில் உணர்ந்துகொள்ளும் இலகுநடையில் அமைந்த பாடல்களைப் பாடியமை.
- சங்கச் செய்யுள்களிற் செறிந்து கிடக்கும் காதல் இன்பத்தையும், வீர மேம்பாட்டையும் யாவரும் எளிதில் உணர்ந்துகொள்ளும் இலகுவான நடையில் பாடியமை.
- உறுதி பயக்கும் உண்மைப் பொருளினை ஆராய்ந்து அறிந்தமை.
- ஆராய்ந்ததைப் பிறருக்குத் தெளிவாக வலியுறுத்தியமை.
- நினைப்போரது உள்ளத்திலே உவகையோடு கூடிய மனோபாவங்களை உண்டாக்கி, நெஞ்சினை உருக்கி, கண்ணீர்த்துளி பொருந்துமாறு செய்தமை.

**(06 புள்ளிகள்)**

(இ)

- ஆறு வகையாக வகைப்படுத்துகின்றார்.
  பாரதமாதா, கண்ணன், பராசக்தி, பாரதவீரர், பாரத மக்கள், குமாரவேள் ஆகிய பாட்டுடைத் தலைவரைப் பரவுகின்ற இன்னிசைப் பாடல்கள்.

**(04 புள்ளிகள்)**

(ஈ)

- நெஞ்சினை உருக்கும் நீர்மை வாய்ந்தது.
- புதிய கருத்துகளும், புதிய நடையும் பொருந்தியது.
- தெய்வத்தைத் தோழனாகவும், தாயாகவும், தந்தையாகவும்,சேவகனாகவும், அரசனாகவும், சீடனாகவும், சற்குருவாகவும், குழந்தையாகவும், காதலனாகவும், காதலியாகவும், ஆண்டானாகவும், குலதெய்வமாகவும் பரவுகின்றமை: பக்திச் சுவை நிரம்பியமை.
- கண்ணனைத் தோழனாகப் பாடிய பாட்டு, நட்பின் இலக்கணத்தை உணர்த்தி தோழமையின் மாண்பினைக் கூறுகிறது.
- கண்ணனைத் தாயாகப் பாடிய பாட்டு, இயற்கையின் வனப்பு நலத்தினைக் கூறுவது. தந்தையாகப் பாடிய பாட்டு, காத்தற் கடவுளின் அருள் திறத்தையும், வேதத்தின் மாண்பையும் கூறுகிறது.
- சேவகனாகப் பாடிய பாட்டு, ஆண்டவனை அடிமையாகக் கொண்டவர்கள், இம்மை மறுமைச் சுகத்தைப் பெறுவர் எனக் கூறுகிறது.
- சீடனாகப் பாடிய பாட்டு, ஆண்டவனே நல்லறிவு உணர்த்தும் ஆசான் எனக் கூறுகிறது.

- சற்குருவாகப் பாடிய பாட்டு, வாழுகின்ற ஞான மார்க்கத்தை நலம் பெறக் கூறுகின்றது.
- காதலனாகப் பாடிய பாட்டு, கவிச்சுவை நுகர வல்லார்க்குத் தெவிட்டாத தெள்ளமுதாவன் எனக் கூறுகிறது.
- தன்னை அடிமைப் பறையனாகவும், கண்ணனை ஆண்டானாகவும் வைத்துப் பாடுகின்ற பாடல்கள், வியப்புச் சுவையையும், கருணைச் சுவையையும் கூறுகின்றன.

**(06 புள்ளிகள்)**

**[04 + 06+04 + 06 = 20 புள்ளிகள்]**

**7.** ஜெயகாந்தனின் **யுகசந்தி** என்ற சிறுகதையில்,

(அ) பாரம்பரிய மதிப்பீடுகளுக்குள் கட்டுண்ட பிராமண சமூகத்தில் விதவைகளின் மறுவாழ்வு பற்றிய பிரச்சினை எவ்வாறு கையாளப்படுகின்றது என்பதை விளக்குக.

(ஆ) கீதாவின் கடிதம் இக்கதையில் பெறும் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக.

(இ) கௌரிப் பாட்டியின் பாத்திர உருவாக்கத்தினை மதிப்பிடுக.

(ஈ) சமூக மாற்றம் தொடர்பான ஆசிரியரின் நிலைப்பாடு இக்கதையில் வெளிப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

(அ)

- பாரம்பரிய மதிப்பீடுகளுள் கட்டுண்ட பிராமண சமூகத்தில் விதவைகளின் மறுவாழ்வுபற்றிய பிரச்சினை இக்கதையின் மையப்பொருளாக அமைதல்.
- சிறுவயதிலேயே ஒரு குழந்தையுடன் கணவனை இழந்து விதவையாகி "வரண்ட பாலையாய் மாறிப்போன வாழ்க்கை நெருப்பில் பொறுமையாய் நடந்து பழகியவளாக" கௌரிப் பாட்டியும் - பாட்டிபோல் விதவையானாலும் மறுமணம் புரிந்து புதுவாழ்வு தேட முனையும் அவளது பேத்தி கீதாவும் கதையின் மையப் பாத்திரங்களாக உருவாக்கப்பட்டு, விதவைகளின் மறுவாழ்வு பற்றிய பிரச்சினை இக்கதையில் பேசப்படுகின்றது.
- கீதாவின் முடிவை முழுக்குடும்பமும் எதிர்ப்பதும் பாட்டி மட்டும் ஆதரிப்பதும் முக்கிய கவனத்திற்குரியது.
- கணேசையருக்கும், பாட்டியம்மாளுக்கும் இடையே நடைபெறும் உரையாடல் மூலம் பிரச்சினை அலசப்படுவது.
- கீதாவின் நிலைப்பாட்டை ஆதரித்து அவளுக்குத் துணையாக இருப்பதற்காக வீட்டைவிட்டு வெளியேறும் பாட்டியின் உறுதிப்பாடுமூலம் மாறிய சமூகத்தில் விதவை மறுமணத்துக்கான ஆதரவு வெளிப்படல்.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- கீதாவிடமிருந்து பாட்டி கொண்டுவந்த கடிதம் கதையின் முக்கிய திருப்புமுனையாக அமைதல்.
- பாரம்பரியக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடத் துடிக்கும் சமூக உணர்வின் வெளிப்பாடாக அமைதல்
- கீதாவின் முடிவை கடிதம் வெளிப்படுத்துதல்.
- கீதாவின் கடிதம் குடும்ப உறுப்பினர்களிடம் எழுப்பும் எதிர்வினை – இதன் மூலம் சமூகத்தில் வேரூன்றியுள்ள பாரம்பரிய மதிப்பீடு வெளிப்படுத்தப்படுதல்.

**(05 புள்ளிகள்)**

(இ)

- கௌரிப் பாட்டி பழைமைக்கும் புதுமைக்குமான ஒரு பாலமாக இக்கதையில் உருவாக்கப்பட்டுள்ளாள்.
- பாரம்பரிய மதிப்பீடுகளால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் பிரதிநிதியாகவும், அதனாலேயே சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும் ஒரு பாத்திரமாகவும் உருவாக்கப்பட்டுள்ளாள்.
- பாட்டியின் முற்போக்கான சிந்தனைகள்:
  - நாவிதனின் பிள்ளைகளை எப்பாடுபட்டாவது படிப்பிக்கச் சொல்வது.
  - காலம் மாறும்போது மனுஷாளும் மாற வேண்டும் என்று சொல்வது.
  - கீதாவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்வது.
  - ஆசார உணர்வு மிக்க மகனுடன் வாதிட்டு காலமாற்றம், சமூகமாற்றத்தை உணர்த்துவது.
  - இவ்வகையில் பாட்டி ஒரு யுகசந்தியாக அமைவது.
  - அவ்வகையில் தமிழச்சிறுகதை உலகில் பாட்டி ஒரு மறக்க முடியாத பாத்திரமாக அமைவது.

**(05 புள்ளிகள்)**

(ஈ)

- காலத்துக்கேற்ற வகையில் சமூகம் மாறவேண்டும் என்ற கருத்துடையவர் இக்கதையாசிரியர் என்பது இக்கதையின் மூலம் வெளிப்படுகின்றது.
- சம்பவங்கள் மூலமும், எதிர்நிலைப் பாத்திரங்களின் உரையாடல் மூலமும் ஆசிரியரின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படுதல்.
- கௌரிப்பாட்டி, கீதா ஆகிய பாத்திரங்களினூடாக ஆசிரியரின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படுதல்

**[05 × 04 = 20 புள்ளிகள்]**

8. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) சுந்தரரின் **சீபர்ப்பதம் பதிகத்தில்** சீபர்ப்பதமலையின் இயற்கையழகு

(ஆ) தேம்பாவணி **பைதிரம் நீங்கு படலத்தில்** யேசுபாலனின் பிரிவால் யூதேயா நாட்டுக்கு ஏற்பட்ட அவலம்

(இ) சீறாப்புராணம் **மழை அழைப்பித்த படலத்தில்** மழைவெள்ளம் ஐவகை நிலத்தையும் சென்றடைவதை உமறுப்புலவர் சித்திரிக்குமாறு

(ஈ) புதுமைப்பித்தனின் **சாபவிமோசனம்** சிறுகதையில், அநீதி என்று பட்டதை எதிர்க்கும் அகலிகையின் ஆவேசம் (20 புள்ளிகள்)

(அ)

- இயற்கை அழகோடுகூடிய குறவர்களின் வாழ்க்கை.
- யானைகள், பன்றிகள், மான்கள், மரைகள், கிளிகள், மயில்கள் ஆகியனவற்றின் செயற்பாடுகள். (உணவினைத் தேடல், நீர் பருகுதல், மரங்களில் உடம்பினை உராய்தல்,யானைகளை உணவு உண்ணச் செய்தல், கிளிகளை விரட்டுதல், ஆண் – பெண் யானைகளின் முரண், மிருகங்களும் பறவைகளும் தேன் உண்ணுதல்).

(ஆ)

- இசைக்கருவிகள் இயங்காமை. (முரசு, சங்கு)
- ஊரின் அமைதி செத்த உடம்பினை ஒத்திருத்தல்.
- நன்மைகள் நலிந்து போதல்.
- நற்பண்புகள் நீங்குதல். (அருள், அன்புணர்ச்சி, அறிவு, தருமம், தவம்,வேதம், கொடை, தெளிவு, வறுமை, நீதி, வீரச்சிறப்பு, பெருமை, மனவுறுதி, ஞானம், பொருள்,புகழ், புலமை, வனப்பு, வசீகரம்)
- ஏரோதுவின் குணம்போல அவனால் ஆளப்பட்ட மக்கள் பாவச் செயல்களில் ஈடுபட்டு அறியாமையில் படர்ந்திருத்தல்.
- பகை, நெடும்பசி, நோய், வறுமை, கேடு, நீசத்தனம், தீய செயல்கள் என்பன அறிவை அகற்றி மனங்கலக்குதல், பாவவினை வளர்ந்து வாட்டுதல்.

(இ)

- மழை வெள்ளம் **குறிஞ்சி** நிலத்திலுள்ள மூங்கில்களை முறித்து, அவை வெடித்ததால் சிதறிய முத்துக்களை **முல்லை** நிலத்திலுள்ள புறாக்களுக்குக் கொடுத்தல்.
- முல்லை நிலத்தில் கிடைக்கின்ற தூய நெய், தயிர், பால் ஆகியவற்றை குடத்துடன் எடுத்து வெம்மைமிகுந்த **பாலை** நிலத்தில் சேர்த்தல்.
- பாலை நிலத்தில் காணப்படும் படத்தினையுடைய நாக பாம்பின் நாகரத்தினங்களை வளம் நிறைந்த **மருத** நிலத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தல்.
- மருத நிலத்திலுள்ள நெற்குவியல்களைத் தாக்கி **நெய்தல்** நிலத்திற் சேர்த்தல்.
- நெய்தல் நிலத்திலுள்ள உப்பினை சமுத்திரத்தினுள் கொண்டு சேர்த்தல்.

(ஈ)

- அக்கினிப் பிரவேசம் பற்றி சீதை கூறியபோது, அகலிகை துடித்தல்.
- “அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?” எனக் கேட்டு, தனது எதிர்ப்பை வெளிப்படுத்துதல்.
- “அவர் கேட்டார், நான் செய்தேன்” எனச் சீதை கூறியபோது, ”அவன் கேட்டானா?” என அகலிகை கத்துதல்.
- அவள் மனதில் கண்ணகிவெறி தாண்டவமாடியதாகவும், “அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா?” என அவள் கேட்டதாகவும் அகலிகையின் மனவுணர்வினை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளமை.
- “உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகத்திற்கு நிரூபித்து விட்டால் மட்டும் அது உண்மையாகிவிடப் போகிறதா?” என்ற அகலிகையின் கேள்வியானது ஒட்டுமொத்த ஆண் வர்க்கத்தினரையும் நோக்கி எழுப்பப்படும் கேள்வியாக அமைதல்.
- இராமனை வழியனுப்பச் செல்லாமல் தனது எதிர்ப்பையும் ஆவேசத்தையும் வெளிப்படுத்துதல்.
- மேலும், பரதனைக் கட்டுப்படுத்தக் கோரும்போது “மனிதருக்குக் கட்டுப்படாத தர்மம், மனித வம்சத்திற்குச் சத்துரு” என அகலிகை கொதித்தல்.

[10 × 02 = 20 புள்ளிகள்]

*******************************

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018
# தமிழ் II
# புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள், முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள ஆறு வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | **இலக்கணம்** | | | |
| | அ. | 01 × 20 | = 20 புள்ளிகள் | |
| | ஆ. | 02 × 05 | = 10 புள்ளிகள் | **30 புள்ளிகள்** |
| 02. | அ. | சுருக்கம் | = 10 புள்ளிகள் | |
| | ஆ. | கிரகித்தல் | = 10 புள்ளிகள் | **20 புள்ளிகள்** |
| 03. | கட்டுரை | | | |
| | | பொருள் | = 08 புள்ளிகள் | |
| | | மொழிநடை | = 08 புள்ளிகள் | |
| | | அமைப்பு | = 04 புள்ளிகள் | **20 புள்ளிகள்** |

## பகுதி II பிரிவு (அ) (ஏதாவது ஒன்று)

| | | | |
|---|---|---|---|
| 04. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |
| 05. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |
| 06. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |

**பிரிவு (அ) (ஏதாவது ஒன்று)**

| | | | |
|---|---|---|---|
| 07. | அ. | 05 புள்ளிகள் | |
| | ஆ. | 05 புள்ளிகள் | |
| | இ. | 05 புள்ளிகள் | **15 புள்ளிகள்** |
| 08. | 05 x 3 | | **15 புள்ளிகள்** |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

14.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களையும், பகுதி **II** இன் **'அ'** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் **'ஆ'** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* முதலாம் வினாவின் **'அ'** பகுதியிலுள்ள **இருபது** வினாக்களும் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

**சுட்டெண் :** ..........................

## பகுதி I

1. (அ) **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் சார்பெழுத்து **4**
(1) ஆ (2) ம் (3) ஐ (4) ம (5) க் (......)

1.2 பின்வருவனவற்றுள் 'எ' வேறுபட்டு ஒலிக்கும் சொல் **3**
(1) என்ன (2) எருமை (3) எழுது (4) எது (5) எல்லை (......)

1.3 பின்வருவனவற்றுள் வன்தொடர்க் குற்றியலுகரம் இடம்பெறும் சொல் **3**
(1) ஆடு (2) அங்கு (3) விட்டு (4) விறகு (5) செய்து (......)

1.4 பின்வருவனவற்றுள் குற்றியலுகரம் கெட்டுப் புணர்ந்த சொல் **1**
(1) வாக்கை (2) வாழ்க்கை (3) பருக்கை (4) புக்கை (5) அளிக்கை (......)

1.5 வேற்றுமை உருபு ஏற்கும்போது 'அத்து' சாரியை பெறும் சொல் **2**
(1) மெய்யீற்றுப் பெயர் (2) மகர ஈற்றுப் பெயர் (3) பண்புப் பெயர்
(4) மூவிடப் பெயர் (5) குற்றியலுகர ஈற்றுப் பெயர் (......)

1.6 வருமொழி முதலில் உயிர் வரும்போது ஈற்றுமெய் இரட்டித்துப் புணரும் சொல் **3**
(1) பால் (2) காண் (3) கண் (4) வாள் (5) மடல் (......)

1.7 பின்வருவனவற்றுள் பகுபதம் **3**
(1) விருந்து (2) பருந்து (3) இருந்து (4) வருந்து (5) அருந்து (......)

1.8 'ஓடிக்கொண்டிருந்தார்கள்' - இச்சொல்லின் பகுதி **3**
(1) ஓடி (2) ஓடு (3) ஓடிக்கொண்டிரு
(4) ஓடிக்கொள் (5) ஓடிக்கொண்டு (......)

1.9 தாங்கள் எப்போது வருவீர்கள் ? - இவ்வாக்கியத்தில் 'தாங்கள்' என்பது
(1) படர்க்கைப் பன்மைப் பெயர் (2) தன்மைப் பன்மைப் பெயர்
(3) முன்னிலைப் பன்மைப் பெயர் (4) முன்னிலை உயர் மரியாதைப் பெயர் **4**
(5) படர்க்கைப் பெயர் (......)

1.10 பின்வருவனவற்றுள் 'அல்' விகுதி பெற்ற ஆக்கப்பெயர்
(1) சுண்டுதல் (2) வண்டல் (3) சுண்டல்
(4) ஓடல் (5) பொரித்தல்
3 (......)

1.11 'அவன் சொன்னது எனக்குத் தெரியாது.' - இவ்வாக்கியத்தில் இடம்பெறும் 'சொன்னது' என்ற சொல்
(1) இறந்தகால வினைமுற்று (2) ஒன்றன்பால் வினைமுற்று
(3) வினையாலணையும் பெயர் (4) தொழிற்பெயர்
(5) காலங்காட்டும் தொழிற்பெயர்
5 (......)

1.12 பின்வருவனவற்றுள் வினைத்தொகை இடம்பெற்ற சொல்
(1) முகநூல் (2) சுடுநீர் (3) மீன்சந்தை
(4) முழுநிலவு (5) கருமுகில்
2 (......)

1.13 'ஆல்' வேற்றுமை உருபாக இடம்பெறும் சொல்
(1) நடந்தால் (2) நடந்திருந்தால் (3) நடந்ததால்
(4) நடக்காவிட்டால் (5) நடந்திருக்காவிட்டால்
3 (......)

1.14 கூட்டுவினை இடம்பெறும் வாக்கியம்
(1) நான் ஊருக்குப் போய் வந்தேன்.
(2) நான் ஊரிலிருந்து வந்தேன்.
(3) நான் ஊருக்கு வரமாட்டேன்.
(4) நான் ஊரிலிருந்து வந்துவிட்டேன்.
(5) நான் உங்களை ஊருக்கு வந்து பார்க்கிறேன்.
4 (......)

1.15 பின்வருவனவற்றுள் 'இ' கால இடைநிலையாக வந்துள்ள வினைமுற்று
(1) ஓடினேன் (2) ஓடினாய் (3) ஓடினார்
(4) ஓடின (5) ஓடியது
5 (......)

1.16 பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை
(1) எழுது (2) படி (3) உண்
(4) அழு (5) பார்
4 (......)

1.17 'படித்த' என்பது பெயரடையாக வரும் வாக்கியம்
(1) அவர் படித்த புத்தகங்கள் ஏராளம்.
(2) என்னிடம் படித்த மாணவர்கள் என்னை இன்றும் மதிக்கிறார்கள்.
(3) என்னுடன் படித்த கமலா நன்றாகப் பாடுவாள்.
(4) அவன் ஒரு படித்த பெண்ணைத்தான் திருமணம் செய்தான்.
(5) நான் படித்த கவிதை அற்புதமானது.
4 (......)

1.18 'இன்னா நாற்பது கபிலரால் எழுதப்பட்டதென்பது பெரும்பாலார் கொள்கை.' - இவ்வாக்கியத்தில் எழுவாய்
(1) இன்னா நாற்பது (2) பெரும்பாலார்
(3) கபிலரால் எழுதப்பட்டதென்பது (4) இவ்வாக்கியத்தில் எழுவாய் இல்லை.
(5) இன்னா நாற்பது கபிலரால் எழுதப்பட்டதென்பது
5 (......)

1.19 'என் சாஸ்திரம் என்னோடேயே இருந்து, இந்தக் கட்டையோடேயே எரியும்.' - இவ்வாக்கியம்
(1) தனி வாக்கியம். (2) கூட்டு வாக்கியம். (3) கலப்பு வாக்கியம்.
(4) இலக்கண வழுவுடையது. (5) கூட்டுக் கலப்பு வாக்கியம்.
2 (......)

1.20 'கணேசையர் கண்களைப் பிழிந்துவிட்டுக் கொண்டார்.' - இவ்வாக்கியத்தில் 'கண்களைப் பிழிந்து விடுதல்' என்பதன் பொருள்
(1) கண்களைக் கசக்குதல் (2) கண்களை வருத்துதல்
(3) கண்களை உறுத்துதல் (4) கண் கலங்குதல்
(5) துயர் மிகுதியால் அழுதல்
5 (......)

(20 புள்ளிகள்)

# தமிழ் II

## பகுதி I

1. (ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. கூட்டுப்பகுதி என்றால் என்ன ? உதாரணம் தந்து விளக்குக.
2. படர்க்கைத் தற்சுட்டுப்பெயர் என்றால் என்ன என்பதை விளக்கி, அது இடம்பெறும் வாக்கியம் ஒன்றை எழுதுக.
3. எதிர்மறைவினை என்றால் என்ன ? தற்காலத் தமிழில் இடம்பெறும் எதிர்மறை இடைநிலைகள் யாவை ?
4. வேற்றுமைப்புணர்ச்சியை உதாரணம் தந்து விளக்குக.
5. வினாப்பெயர்களை திணை அடிப்படையில் வகைப்படுத்துக. (10 புள்ளிகள்)

1.

- பகுபதம் ஒன்றின் அடிச்சொல் பகுபதமாக, அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களால் ஆன கூட்டுச்சொல்லாக இருப்பின் அது கூட்டுப்பகுதி எனப்படும்.

உதாரணம்:

- குருவிக்கூடுகள் – குருவிக்கூடு + கள்; இங்கு பகுதி – குருவிக்கூடு. இது குருவி, கூடு என்ற இரண்டு சொற்களாலானது
- வந்துவிட்டான் – இங்கு, வந்துவிடு என்பது கூட்டுப் பகுதி.

2.

- வாக்கியத்தில் எழுவாய்ப்பெயரைச் சுட்டும் தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள் படர்க்கைத் தற்சுட்டுப் பெயர் எனப்படும்.
- உதாரண வாக்கியம்:
- மாணவர்கள் தாங்கள் கல்வியில் கவனமாக இருக்க வேண்டும்.

3.

- வினை நிகழாமையை உணர்த்தும் வினை எதிர்மறைவினை எனப்படும்.
- தற்காலத்தமிழில் இடம்பெறும் எதிர்மறை இடைநிலைகள்:

- ஆ - — வராது

- ஆத் - — வராதே

- மாட்டு - — வரமாட்டேன்

4.

- எழுவாய் வேற்றுமையும் விளிவேற்றுமையும் தவிர்ந்த ஏனைய ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலிய உருபுகள் வெளிப்பட்டும் மறைந்தும் வர, சொற்கள் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.
- உதாரணம்: ஆற்றைக் கடந்தான்.
  ஆறு கடந்தான்.

5.

| **உயர்திணை** | **அஃறிணை** |
|---|---|
| யார் | என்ன |
| எவன் | எது |
| எவள் | எவை |
| எவர் | எத்தனை |
| எவர்கள் | எவ்வளவு |

**(02 × 05 = 10 புள்ளிகள்)**

**[20 + 10 = 30 புள்ளிகள்]**

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

நம்முடைய தேசத்தாருள்ளே கடன்படும் வழக்கம் மிகப் பெரிது. கடன்படாதவர் நூற்றுவருள்ளே ஒருவர் கிடைப்பதும் மிக அரிது. அநேகர், சுகதுக்க கருமங்களிலே பிறர் செலவு செய்வதைப் பார்த்து, தாங்களும் அப்படியே செலவு செய்யாதொழிந்தால் தங்களுக்கு அவமானமாகும் என்று எண்ணிக் கண்ணை மூடிக்கொண்டு, அகப்படுமட்டும் கடன்பட்டுச் செலவு செய்கின்றார்கள். கடன்பட்டு வட்டி வளர்ந்தபின் முன்னுள்ளதும் இழந்து பசிநோயால் வருந்துதலும் கடனைத் தீர்க்க இயலாது கடன்கொடுத்த தனவந்தர் குடியைக் கெடுத்தலும் அவமானமல்லவாம்; வரவுக்கேற்ப மட்டாகச் செலவுசெய்து முட்டின்றி வாழ்தல் அவமானமாம். ஐயையோ! இவர்கள் அறியாமை இருந்தபடி என்னை! நம்முடைய தேசத்தார்கள் சுகதுக்க கருமங்களிலே செலவிடும் பொருள் பெரும்பாலும் யாவரிடத்தே சேர்கின்றது ? தொழில் செய்து சீவனஞ் செய்யச் சக்தியுடையவர்களாய் இருந்தும் அது செய்யாத சோம்பேறிகளிடத்தன்றோ ? யாசித்துப் பொருள் சம்பாதிக்கும் இச்சோம்பேறிகளுள்ளே அநேகர் உண்டுடுத்து எஞ்சிய பொருள் கொண்டு ஆபரணம் செய்வித்து, வீடு கட்டுவித்து, விளைநிலம் தோட்டம் முதலியவை வாங்கி, நூற்றுக்கு இரண்டு மூன்று வீதம் வட்டிக்குக் கொடுத்துக்கொண்டு செல்வர்களாய் இருக்கின்றார்களே. தொழில் செய்து வருந்திச் சம்பாதிப்பவர்களுள்ளே, அநேகர் சுகதுக்க கருமங்களிலே இவர்களிடத்திலே கடன்பட்டு, இவர்களுக்கே இறைத்துவிட்டு, வட்டி வளர்ந்தபின், இவர்கள் தங்கள் வீட்டுவாயிலில் வந்து சிறிதும் கண்ணோட்டமின்றித் தங்களை வாயில் வந்தபடி பேச, அவமானமடைந்து, தங்கள் சொத்துக்களை விற்றுக்கொடுத்துவிட்டு அன்னத்திற்கு அலைகின்றார்களே.

(அ) சுருக்கத்தில் இடம்பெற வேண்டிய விடயங்கள்:

- நம் நாட்டவருள் கடன்படாதவர் அரிது.
- சுக, துக்க கருமங்களுக்கு பிறர் செலவு செய்வதுபோலச் செலவு செய்யாவிடின் அவமானம் என்று கடன்படுகிறார்கள்.
- உண்மையில் அவமானப்பட வேண்டிய விடயங்கள் பற்றிக் கவலைப்படுவதில்லை.
- கடன்பட்டு ஆடம்பரமாகச் செலவு செய்யும் பொருள், பாடுபட்டு உழையாத சோம்பேறிகளைப் பணக்காரர்களாக்குகிறது.
- கடன்பட்டுச் செலவு செய்தவர்கள், வட்டிக்கு வட்டி கட்டி, வறுமைக்கும் அவமானத்திற்கும் ஆளாகி அலைகிறார்கள்.

**(10 புள்ளிகள்)**

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

முற்காலத்தே தமிழ் கற்கப்புகுந்தோர் இலக்கணம், நிகண்டு என்ற இருவகைக் கருவிநூல்களைக் கையாண்டு வந்தனர்.

நிகண்டுகளில் ஒரு சில ஒவ்வொரு பொருளுக்குமுரிய பல பெயர்களையும் ஒரு குறித்த நெறிமுறையே கூறிச் செல்வன. அவை ஒரு பொருட் பல்பெயர்த்தொகுதி எனப்படும். வேறுசில ஒவ்வொரு சொல்லுக்குமுரிய பல பொருள்களையும் விரித்துச் சொல்லுவன. அவை ஒரு சொற் பல்பொருட் பெயர்த்தொகுதி எனப் பெயர் பெறும். இன்னுஞ்சில 'இரு சுடர்', 'முக்குணம்' என்பன போன்ற தொகைப் பெயர்கள் இன்னின்ன பொருள்களை உணர்த்துகின்றனவென்று முறையே விளக்குவன. அவை பல்பொருட்கூட்டத் தொருபெயர்த் தொகுதியெனப் பெயர்பெறும். இவற்றுள், ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதிக்கு மண்டலபுருடரியற்றிய சூடாமணி நிகண்டின் 11-ம் தொகுதி சிறந்ததொரு எடுத்துக்காட்டாக உள்ளது. இத்தொகுதியை முன்மாதிரியாகக் கொண்டு செய்யப்பட்ட நூல்களுள் ஒன்று அரும்பொருள் விளக்க நிகண்டு.

இத்தொகுதியின் வரலாற்றில் கால - அடைவில் நிகழ்ந்த வேறுபாடுகள் நன்கு ஆராய்ந்துணர்தற்குரியன. தொல்காப்பியப் பெருநூலின்கண்ணேயே இதற்குரிய தோற்றுவாய் இனிது புலப்படுகின்றது. அந்நூலிலே, சொல்லதிகாரத்தில், உரிச்சொல்லியற் சூத்திரங்களிற் சிலவற்றையும் அவை அமைந்துள்ள முறையையும் நோக்கினால் யான் கூறியதன் உண்மை வெளிப்படும். ஓர் உதாரணங் காட்டுகின்றேன்:

செழுமை வளனும் கொழுப்பு மாகும்.
விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்.

இவ்வடிகளில், 'செழுமை', 'விழுமம்' என்ற இரண்டு சொற்களுக்குமுரிய பல பொருள்களும் உணர்த்தப்படுகின்றன. அவ்வாறு உணர்த்துதலோடு அமையாது எதுகை நயத்தால் இவ்வடிகள் இன்புறுத்துகின்றமையும் நாம் மனங்கொளற்குரியது. இவை போன்ற உரிச்சொல் அடிகளின் பொருளமைதியும் எதுகை நயங்களுமே வரவரப் பலவாறாக விருத்தியடைந்து நிகண்டு நூல்களில் தனியே விளங்குவனவாயின. தொல்காப்பியத்திற்குப் பின்னரே தமிழில் நிகண்டு நூல்கள் தோன்றினவாகும்.

(i) பண்டைக்காலத்தில் தமிழ் கற்போருக்குப் பயன்பட்ட கருவிநூல்கள் யாவை ?

(ii) அரும்பொருள் விளக்க நிகண்டுக்கு முன்மாதிரியாக அமைந்த நூல் எது ?

(iii) ஒரு பொருட் பல்பெயர்த்தொகுதி, ஒரு சொற் பல்பொருள் தொகுதி என்பன எவற்றைக் குறித்து நிற்கின்றன?

(iv) தொல்காப்பியத்தை நிகண்டுகளின் முன்னோடி நூலாகக் கருதுவதற்குக் காரணம் என்ன ?

(v) எத்தகைய நிகண்டுகள் பல்பொருட்கூட்டத் தொருபெயர்த் தொகுதி எனப் பெயர் பெற்றன ?

(10 புள்ளிகள்)

(ஆ)

i. இலக்கணம், நிகண்டு.

ii. மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு.

iii. - ஒவ்வொரு பொருளுக்கும் உரிய பல பெயர்களையும் ஒரு குறித்த நெறிமுறையில் கூறுவது.
- ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பல பொருள்களையும் விரித்துக் கூறுவது.

iv. தொல்காப்பியம், சொல்லதிகாரம் உரிச்சொல்லியற் சூத்திரங்களிற் சில, சொற்களுக்குரிய பல பொருள்களை உணர்த்துகின்றன. அவை எதுகை நயத்தால் இனிமை தருகின்றன.
இத்தன்மைகள் நிகண்டு நூல்களில் விருத்தியடைந்தன.

V. இருசுடர், முக்குணம் போன்ற தொகைப் பெயர்களின் பொருளை உணர்த்தும் நிகண்டுகள்.

(02 × 05 = 10 புள்ளிகள்)

[10 + 10 = 20 புள்ளிகள்]

3. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து, 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) இலக்கியக் கல்வியின் பயன்

(ஆ) தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியிலே பேராசிரியர் க. கைலாசபதியின் பங்களிப்பு

(இ) சமூக ஊடகங்கள் : நன்மையும் தீமையும்

(ஈ) சமூக நல்லிணக்கமும் அபிவிருத்தியும்

(உ) 'யாரையும் மதித்து வாழ்!'

(20 புள்ளிகள்)

(அ) இலக்கியக் கல்வியின் பயன்

- இலக்கியக் கல்வி என்றால் என்ன என்பதை விளக்குதல்.
- இலக்கியம் - மனித வாழ்வியல் அனுபவங்களை வெளியிடுவது.
- உள்ளார்ந்த இரசனைகளைத் தூண்டுவது.
- கற்பனை அம்சம் நிரம்பியது.
- சமூக விழுமியங்களைப் பற்றிப் பேசுவது.
- அறம், பண்பாடு முதலானவற்றை வற்புறுத்துவது.
- மனித உள்ளங்களைப் புரிந்துகொள்ள உதவுவது.
- மனித மேம்பாட்டை வலியுறுத்துவது.
- எத்துறை சார்ந்தாரையும் ஈர்க்க வல்லது.

(ஆ) தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியிலே பேராசிரியர் க. கைலாசபதியின் பங்களிப்பு

- தமிழ் இலக்கியங்களை விஞ்ஞானபூர்வமாக வரலாற்று ரீதியில் அணுகி விமர்சித்தமை.
- இலக்கிய வரலாற்றையும், சமூக வரலாற்றையும் தொடர்புபடுத்தி நோக்கியமை.
    - தமிழ் நாவல் இலக்கியம்

- பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்
- அடியும் முடியும்

- ஒப்பியல் அணுகுமுறையைக் கையாண்டமை.
  - தமிழ் வீரயுகப் பாடல்கள்
  - இரு மகாகவிகள்
  - ஒப்பியல் இலக்கியம்

- இலக்கியம், இலக்கியக் கோட்பாடுகள், விமர்சனக் கோட்பாடுகள் பற்றித் தெளிவுறுத்தியமை.
  - கவிதை நயம்
  - இலக்கியமும் திறனாய்வும்
- சமகால இலக்கியங்கள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டும், இலக்கியத்தின் சமூகப் பயன்பாட்டை வலியுறுத்தியும், இலக்கியவாதிகளை நெறிப்படுத்தியமை, ஊக்குவித்தமை, இயக்க ரீதியாக (முற்போக்கு எழுத்தாளர் சங்கம்) செயற்பட்டமை.
- தேசிய இலக்கியத்தை வலியுறுத்தியமை.
- முக்கியமான சிலரது சமூக, இலக்கியப் பங்களிப்பினை மதிப்பிட்டமை. (பாரதியார், ஆறுமுகநாவலர், விபுலாநந்த அடிகள் முதலானோர்)

**(இ) சமூக ஊடகங்கள் : நன்மையும் தீமையும்**

- சமூக ஊடகங்கள் பற்றிய சுருக்கமான அறிமுகம்.
  (முகநூல், டுவிட்டர், வைபர், வட்ஸ்சப், வலைப்பூக்கள் முதலானவை)

- பிரதான ஊடகங்களுடன் ஒப்பிடுதல். (அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள்)

**நன்மைகள்:**

- தகவல்களை விரைவாகவும், சுலபமாகவும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு.
- தனிப்பட்ட நெருக்கத்திற்கான வாய்ப்பு.
- பல்லூடகத் தன்மை (ஒலி, ஒளி)
- பதிலளிக்கும் வாய்ப்பு (விரைவுத் தன்மை)
- கலந்துரையாடல் பண்பு, விவாதத்திற்கான வாய்ப்பு.
- பேசாப்பொருளையும் பேசும் வாய்ப்பு.
- குழுநிலையான இணைவுச் சாத்தியப்பாடு.

**தீமைகள்**

- அந்தரங்கத்தன்மை பாதிப்படைதல்.

- அடிமையாதல்.
- கால விரயம்.
- எண்ணப்போக்கு மாற்றம்.
- உறுதிப்படுத்தப்படாத தகவல் பரவுகை.
- ஆழமான வாசிப்பிற்கான சாத்தியமின்மை.
- விவாதத் தன்மை குறைவு.
- ஆளிடைத் தொடர்பாடல் குறைதல்

**(ஈ) சமூக நல்லிணக்கமும் அபிவிருத்தியும்**

- சமூக நல்லிணக்கம் பற்றிய அறிமுகம்.
    - பல்லின சமூக அமைப்பில் இனநல்லிணக்கம், சமய நல்லிணக்கம் என்பன பற்றிய விளக்கம்.
- இன சமூக அமைப்பில் காணக்கூடிய பல்வேறு வேற்றுமைகளில் ஒற்றுமை காண்பது.
- இன, மத, கலை, கலாசார வேறுபாடு அற்று யாவரையும் மதித்து வாழும் தன்மை பற்றிய விளக்கமும், அதன் மூலமான நல்லிணக்கமும். (உதாரணம்: புத்தாண்டு விழா, இப்தார் நிகழ்ச்சிகள்)
- ஒரு நாட்டின் சமூக நல்லிணக்கமே அந்நாட்டில் அரசியல், சமூக, பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும்
- அரசியல் சமத்துவம், சமூக உறவுச் சிறப்பு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்கு நல்லிணக்கம் வித்திடும்
- ஒற்றுமை இன்றேல் அனைவருக்கும் தாழ்வே

**(உ) 'யாரையும் மதித்து வாழ்!'**

- எல்லோருக்கும் சுய மரியாதை உணர்வுண்டு.
- ஆகவே எல்லோரும் யாரையும் மதித்தல் வேண்டும்.
- பிறரை மதியாதவன், பிறரால் மாத்திரமன்றி தன்னாலும் மதிக்கப்பட மாட்டான்.
  "மானுடம் போற்ற மறுக்கும் ஒரு
  மானிடன் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்"
- இனம், மதம், பிரதேசம், நிறம், வர்க்கம், பால், வயது முதலானவற்றின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு பார்த்து மதித்தல் தகாது.
  "யாதும் ஊரே யாவரும் கேளிர்"
- பிறரை மதிக்காது நடப்பதால் பகைமை விளையும்.
- சமூக விரோத மனப்பான்மை வளரும்.
- சமூக ஒற்றுமை குலையும்.

**(08 + 08 + 04 = 20 புள்ளிகள்)**



(இ)

## பகுதி II

### பிரிவு 'அ'

4. (அ) அகத்திணை, புறத்திணை என்ற பாகுபாட்டுக்கான அடிப்படையினைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) புறத்திணை நூல்களின் வாயிலாகச் சங்ககாலப் புலவர்களைப் பற்றி அறிந்துகொள்ளக்கூடிய முக்கிய செய்திகள் யாவை ?

(இ) ஆற்றுப்படை இலக்கியத்தின் அமைப்பினையும் சங்ககாலத்தில் அது பெற்ற வளர்ச்சியினையும் விளக்குக. (15 புள்ளிகள்)

**(அ)**

- சங்க இலக்கியங்கள் இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை முறையைச் சித்திரிப்பன.
- **அகம் :** ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் உள்ளத்து உணர்வால் நுகரும் இன்பம். (காதல்)
  - முதல், கரு, உரி பொருத்தப்பாடு உடையன.
  - சுட்டி ஒருவர் பெயர்கொளப்படுவதில்லை
  - பாத்திரக் கூற்றாக அமைவன.
- **புறம் :** ஒத்த அன்புடையார் மட்டுமன்றி எல்லோராலும் அனுபவித்து அறியப்பட்டு ஈது இவ்வாறிருந்தது என்று கூறத்தக்க விடயங்கள்.
  - போரும் போரின் விளைவுகளும்
  - வீரம்
  - கொடை
  - நீதி
  - நிலையாமை முதலிய அறக்கருத்துக்கள்

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- புலவர்களால் புகழ்ந்து பாடப்படுவதை அரசர்கள் அவாவியமை
- புலவர்கள் சமூக, பொருளாதார ரீதியில் அரசர்களை அநுசரித்து நடக்கவேண்டிய நிலையில் இருந்தமை.
- சில புலவர்கள் சமூக விழுமியங்களை வலியுறுத்துபவர்களாக இருந்தமை.
- சிலர் அஞ்சாது நீதியை எடுத்துரைக்க வல்லவர்களாய் விளங்கியமை.

**(05 புள்ளிகள்)**

(இ)

- ஆற்றுப்படை இலக்கியத்தின் அமைப்பு
  - சங்க காலத்திலேயே தனியான இலக்கிய வடிவமாக வளர்ச்சியுற்ற சிறப்பினையுடையது.
  - வழிப்படுத்தல் என்று பொருள் உடையது.
  - புரவலன் ஒருவனிடம் பரிசில் பெற்ற ஒருவர் (கூத்தர்/பாணர்/புலவர்) இன்னொருவருக்கு அவனிடம் பரிசில்பெறும் மார்க்கத்தை எடுத்துரைப்பதாக அமைவது.
  - பாடாண்திணை சார்ந்தது.
  - பாட்டுடைத் தலைவனது கொடைச் சிறப்போடு அவனது வீரம், நாட்டுவளம் முதலானவற்றையும் புகழ்ந்துரைக்க வாய்ப்பானது
- சங்க காலத்தில் அது பெற்ற வளர்ச்சி
  - புறநானூற்றில் ஆற்றுப்படை அமைப்பில் அமைந்த பல செய்யுள்கள் உள்ளன.
  - நெடும் பாடல்களாக இயற்றப்பட்ட ஐந்து ஆற்றுப்படைகள் பத்துப்பாட்டில் உள்ளன.
    (பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, திருமுருகாற்றுப்படை)
  - ஆற்றுப்படுத்தப்படுபவரின் பெயராலன்றி பாட்டுடைத் தலைவன் பெயரால் அமைந்த திருமுருகாற்றுப்படையைப் பாடிய நக்கீரர், தம் இறையனுபவத்தைப் பாட, புது வழியில் திறமையோடு இதனைக் கையாண்டார்.

**(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

5. (அ) சோழப் பெருமன்னர் காலத்தெழுந்த சிற்றிலக்கியங்களின் முக்கிய பண்புகளை எடுத்துக்காட்டுக.

(ஆ) உலாப் பிரபந்தத்தின் அமைப்பினையும் சோழப் பெருமன்னர் காலத்தில் அது பெற்ற வளர்ச்சியினையும் விளக்குக.

(இ) சயங்கொண்டாரின் கவியாற்றல் குறித்துக் கருத்துரை வழங்குக. (15 புள்ளிகள்)

(அ)

- சிற்றிலக்கியங்கள் அரசவைப் புலவர்களினால் அரசர் புகழை நிலைநிறுத்தும் பொருட்டு இயற்றப்பட்டுள்ளன.
- இவை பல வடிவங்களில் அமைந்துள்ளன.
  - பரணி – கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி
  - உலா – விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா
  - பிள்ளைத்தமிழ் - குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்
- அரசரின் ஆட்சிச் சிறப்பு, வீரம், கொடை, வெற்றித்திறன், குலமரபு முதலியவற்றைப் புகழ்ந்து கூறுகின்றமை.

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- தலைவன் வீதியில் உலா வர, அவனை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவ மகளிரும் கண்டு காதல்கொள்வதைக் கூறுவது உலா என்னும் சிற்றிலக்கியமாகும்.
- பல்லவர் காலத்தில் இறைவன் உலா வருவதாக திருக்கைலாய ஞானஉலாவை சேரமான் பெருமாள் நாயனார் பாடினார். அவ்வுலாவின் அமைப்பினைப் பின்பற்றி சோழர் காலத்தில் அரசர் புகழ் பாடப்பட்டது. (விக்கிரம சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா ஆகியவற்றின் தொகுதி மூவருலா எனப்பட்டது)

**(05 புள்ளிகள்)**

(இ)

- முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் நிகழ்ந்த கலிங்கத்துப் போரைக் கூறும் கலிங்கத்துப் பரணி என்னும் பிரபந்தத்தை சயங்கொண்டார் பாடினார்.
- அது பரணிப் பிரபந்தங்களுள் தலை சிறந்ததாகலின் பரணிக்கோர் சயங்கொண்டார் எனப் போற்றப்பட்டார்.
- தாம் கருதிய பொருளைப் புலப்படுத்துவதற்கேற்ற பல்வேறு அணிநலன்களையும் ஓசை, சந்தம் முதலியவற்றையும் அமைத்துச் செய்யுள் இயற்றுவதில் வல்லவர்.

**(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

6. (அ) ஆரம்பகாலத் தமிழ் நாவல்களின் பொதுப் பண்புகளைத் துலக்குக.
   (ஆ) தமிழ் நாவல் வளர்ச்சியிலே **கல்கி** பெறும் இடத்தினைப் பரிசீலிக்குக.
   (இ) சமகாலத் தமிழ் நாவல்களை வகைப்படுத்தி விளக்குக. (15 புள்ளிகள்)

(அ)

- பிரதாபமுதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் ஆகியவை தொடக்ககால நாவல்கள்.
- கதை சொல்லும் முறையிலும், மொழிநடையிலும் பழைய காவிய மரபின் செல்வாக்கு.
- அறப்போதனை, சமூக சீர்திருத்தம், பொழுதுபோக்கு, நகைச்சுவை

**(05 புள்ளிகள்)**

(ஆ)

- தமிழில் வரலாற்று நாவல் முன்னோடி
  - பொன்னியின் செல்வன்
  - பார்த்திபன் கனவு
  - சிவகாமியின் சபதம்
- சமூக நாவல்களும் எழுதியவர்
  - தியாகபூமி
  - அலை ஓசை
  - கள்வனின் காதலி

- சுவையாக, ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கதை சொல்லும் பாங்கு.
- தமிழ் நாவல் இலக்கியத்தை ஜனரஞ்சகமாக்கி வாசகர் தொகையை அதிகரிக்கச் செய்தவர்.
- தேசிய உணர்வு, விடுதலை உணர்வு, சீர்திருத்த உணர்வு, தமிழர் பண்பாடு பற்றிய பெருமித உணர்வு முதலானவற்றை ஊட்ட முனைந்தவர்.

**(05 புள்ளிகள்)**

(இ)

- சமகால சமூகப் பிரச்சினைகளைப் பேசுபொருளாகக் கொண்டவை.
    - சாதிப் பிரச்சினையை மையமாகக் கொண்டவை.
    - வர்க்க முரண்பாட்டைச் சித்திரிக்கும் நாவல்கள்
    - இன முரண்பாட்டையும் அவற்றின் விளைவுகளையும் வெளிப்படுத்துபவை
    - பெண்ணியம் சார்ந்தவை
- பிரதேச நாவல்கள்
- வரலாற்று நாவல்கள்
- உளவியல் அணுகுமுறை கொண்ட நாவல்கள்
- அறிவியல் புனைவு நாவல்கள்.
- துப்பறியும் நாவல்கள்
- தழுவல் / மொழிபெயர்ப்பு நாவல்கள்.

**(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

## பிரிவு 'ஆ'

7. ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் ஈழத்தில் எழுந்த,
   (அ) பள்ளு இலக்கியங்கள்
   (ஆ) அம்மானை இலக்கியங்கள்
   (இ) தூது இலக்கியங்கள்
   என்பவற்றை இனங்கண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

**(அ) பள்ளு இலக்கியங்கள்**

- ஞானப்பள்ளு / வேதப்பள்ளு
  - ஆசிரியர் பெயர் தெரியாது.
  - கிறிஸ்தவ சமயம் சார்பானது.

- பறாளை விநாயகர் பள்ளு
  - நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இயற்றியது.
  - சைவ சமயச் சார்பானது.

- தண்டிகைக் கனகராயன் பள்ளு
  - மாவைச் சின்னக்குட்டிப் புலவர் பாடியது.
  - கனகராய முதலி என்னும் பிரபுமேல் பாடப்பட்டது.

**(05 புள்ளிகள்)**

**(ஆ) அம்மானை இலக்கியங்கள்**

- அர்ச். யாகப்பர் அம்மானை / சந்தியாகுமாயோர் அம்மானை
  - தெல்லிப்பளைப் பேதுருப் புலவர் இயற்றியது.
  - கிளாலி அர்ச். யாகப்பர்மேல் பாடப்பட்டது.

- திருச்செல்வர் அம்மானை
  - தெல்லிப்பளை பூலோகசிங்க முதலியார் / அருளப்ப நாவலர் இயற்றியது.
  - கிறிஸ்தவ இறையடியார் ஒருவர் பற்றியது.

**(05 புள்ளிகள்)**

**(இ) தூது இலக்கியங்கள்**

- குருநாத சுவாமி கிள்ளைவிடு தூது
  - வரத பண்டிதர் இயற்றியது.
  - காங்கேசன்துறைக் கண்ணியவளைப்பதி குருநாதசுவாமி (முருகன்) மேல் பாடப்பட்டது.
- பஞ்சவன்னத் தூது
  - இணுவில் சின்னத்தம்பிப்புலவர் இயற்றியது.
  - இணுவில் இளந்தாரி கைலாயநாதன்மேல் பாடப்பட்டது.
- தத்தைவிடு தூது
  - தி.த. சரவணமுத்துப்பிள்ளை இயற்றியது
  - நவீனத்துவப் பண்புகள் சிலவற்றைக் கொண்டது.

(05 புள்ளிகள்)

**[05 x 03 = 15 புள்ளிகள்]**

**8.** மேல்வருவோருள் யாரேனும் **மூவரின்** தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

(ஆ) பாவலர் துரையப்பாபிள்ளை

(இ) பேராசிரியர் வி. செல்வநாயகம்

(ஈ) அருள்வாக்கி அப்துல்காதிர் புலவர்

(உ) நீலாவணன்

(15 புள்ளிகள்)

**(அ) நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (1875 -1947)**

- பன்மொழிப் புலமை
  தமிழ், சிங்களம்,ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு .....
- வாழ்க்கையின் பெரும்பகுதியை கிறிஸ்தவ மதபோதகராகக் கழித்தவர்.
  கத்தோலிக்க சமயச் சார்பான சிறு நூல்களையும், துண்டுப்பிரசுரங்களையும் எழுதி வெளியிட்டமை.
- மொழியாராய்ச்சியில் ஈடுபட்டமை.
  - தமிழ் அமைப்புற்ற வரலாறு
  - தமிழ் ஒப்பியல் அகராதி
  - தமிழ்ச் சொற்பிறப்பு ஆராய்ச்சி
  - மொழியாராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியமை.
  -

- தமிழின் தொன்மையை வலியுறுத்தியமை.
- நாகரிக வளர்ச்சிக்குத் தமிழரின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியமை.
- வரலாற்று ஆராய்ச்சி.
    - யாழ்ப்பாண வைபவ விமர்சனம்.

**(05 புள்ளிகள்)**

(ஆ) பாவலர் துரையப்பாபிள்ளை (1872 – 1929)

- பாரதியின் சமகாலத்தவர்.
- இவர் படைத்த இலக்கியங்கள்:
    - இதோபதேச கீதரச மஞ்சரி
    - சிவமணிமாலை
    - யாழ்ப்பாண சுவதேசக்கும்மி
- இவரது படைப்புக்களில்,
    - மனித சமூக நலம்
    - சமூக சீர்திருத்தம்
    - சுயதேவைப் பூர்த்தியை நோக்காகக் கொண்ட விவசாய, கைத்தொழில் விருத்தி
    - கல்வி, ஒழுக்க மேம்பாடு
    - கீழைத்தேயப் பண்பாட்டு மறுமலர்ச்சி
    - தேசிய உணர்வு

  முதலான விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.
- பதம், கீர்த்தனை, கும்மி முதலான பொதுமக்கட் சார்பான செய்யுள் வடிவங்களைக் கையாண்டவர்.
- எளிமையான மொழிநடையை பிரக்ஞைபூர்வமாகக் கையாண்டவர்.

**(05 புள்ளிகள்)**

(இ) பேராசிரியர் வி.செல்வநாயகம் (1907 – 1973)

- பாடசாலை ஆசிரியராக, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக, பல்கலைக்கழகப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.
- கற்பித்தலில் வல்லவர்.
- தமிழ் இலக்கிய வரலாற்றினைச் செம்மையான முறையில் முதன்முதலில் எழுதியவர்.
- தமிழ் உரைநடை வரலாறு எழுதியவர்.
- செயல்முறைத் திறனாய்வு வல்லுநர்.

- சிறந்த கட்டுரை ஆசிரியர்.
- சங்க இலக்கியம், தொல்காப்பியம் என்பனமுதல் நவீன இலக்கியம் வரையில் பரந்த புலமையுள்ளவர்.

**(05 புள்ளிகள்)**

**(ஈ) அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் (1866 – 1918)**

- இலங்கை – கண்டியில் வாழ்ந்தவர்.
- சிறு வயதிலேயே பாடும் ஆற்றல் பெற்றவர்.
- கவி வல்லமை காரணமாக 'அருள்வாக்கி' என்னும் பட்டம் பெற்றவர்.
- இஸ்லாம் பற்றிய ஆழ்ந்தகன்ற அறிவும், தமிழ்ப் புலமையும் உடையவர்.
- பல்வகைப் பாக்களையும் பிரபந்தங்களையும் இயற்றுவதில் அசாதாரண ஆற்றல் கொண்டவர்.
- பல்வேறு பிரபந்த வடிவங்களில் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.
    - சந்தத்திருப்புகழ்
    - மாலை (பேரின்ப ரஞ்சித மாலை, திருமதீனத்து மாலை, புதுமொழி மாலை...)
    - பதிகம் (பிரான்மலைப் பதிகம், தேவாரப் பதிகம், சலவாத்துப் பதிகம்...)
    - பிள்ளைத் தமிழ் (காரணப் பிள்ளைத்தமிழ், உமறொலியுல்லா பிள்ளைத் தமிழ்......)
    - கும்மி (காட்டுபாவா சாகிபு கும்மி)
    - கலம்பகம் (கண்டிக் கலம்பகம்)
    - அந்தாதி (துருபகுதாது அந்தாதி, கண்டி பதிற்றுப்பத்து அந்தாதி)
    - குறவஞ்சி (மெய்ஞ்ஞானக் குறவஞ்சி)
    - புராணம் (கோட்டாற்றுப் புராணம்)
    - முனாஜாத்து
- பல தனிச்செய்யுள்கள்.

**(05 புள்ளிகள்)**

(உ) நீலாவணன் (1931 – 1975)

- இயற்பெயர் : கே.சின்னத்துரை
- பயிற்றப்பட்ட தமிழாசிரியர்.
- ஈழத்து நவீன தமிழ்க்கவிதை முன்னோடிகளுள் ஒருவர்.
- கவிதை மாத்திரமன்றி சிறுகதை, உருவகக்கதை, நாடகங்கள், உரைநடைச் சித்திரங்கள் முதலானவற்றையும் எழுதியவர்.
- பல புனைபெயர்களில் எழுதியவர். (நீலாவணன், அம்மாச்சி, ஆறுமுகம், கொழுவுதுறட்டி, நீலவண்ணன்,இராமபாணம், சின்னான் கவிராயர்)

- மனித இயல்புகளை சுவாரசியமாகச் சித்திரிப்பதிலும் பிரதேசப் பேச்சு வழக்கைக் கையாள்வதிலும் வல்லவர்.
- கவிதைத்தொகுதிகள்: வழி, ஒத்திகை, நீலாவணன் காவியங்கள்.
- சிறுகதைத் தொகுதி: ஒட்டுறவு.
- நாடகம்: மழைக்கை.

(05 புள்ளிகள்)

[05 × 03 = 15 புள்ளிகள்]